
# அக சலனம்

நவீனக்கவிதைக் களம்

01

கட்டைவேலி - நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்
கரவெட்டி



*ஆகப்போவதொன்றுமில்லை*
*எல்லா எத்தனமும்*
*வீணேயெனினும்*
*முளையொன்றோடு*
*பிணைத்துன்*
*கழுத்தைச் சுற்றிக்கிடக்கும்*
*வலிய சங்கிலியின்*
*இரும்புக்கண்ணிகளைக்*
*கடித்துக்கொண்டாவது*
*இரு*

●

**ம.மதிவண்ணன்**

**காலாண்டிதழ்**
*டிசம்பர்- பெப்ரவரி 2006*

# சுதந்திரம்

நாங்கள் சுதந்திரமாக பார்க்க
படிக்க
சிந்திக்க விரும்புகிறோம்
நாங்கள் சுதந்திரமாகப் பேச எழுத
தீட்ட விரும்புகின்றோம்
நாங்கள் சுதந்திரமாக உற்பத்தி செய்ய
கட்டுப்படுத்த
வாழ விரும்புகிறோம்

அவர்கள் எமது செவிகளை மறிக்கிறார்கள்
எமது புத்தகங்களை எரிக்கிறார்கள்
எமது கண்களை கட்டுகிறார்கள்
எமது இமைகளின் வியர்வையை
திருடிச் செல்கிறார்கள்
எமது பாதைகளை
முட்கம்பி வேலி போட்டுத்
தடுக்கிறார்கள் தூக்குக் கம்பங்களை
நிறுவுகிறார்கள்

சிலர் கேவலப்படுத்தப்படுகிறார்கள்
மனம் மாற்றிப்படுகிறார்கள்
ஓடிப் போகவும் செய்யப்படுகிறார்கள்
நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம்
பொறுமையாக
நாளைய சுதந்திரத்திற்காக
தொடுவானுக்காக...

••

மூலம் மெஹ்ரம் அஸ்லம்
தமிழில் : யமுனா ராஜேந்திரன்

50
30/12/05

**அகசலனம்**

நவீனக்கவிதைக் களம்

01

ஆசிரியர் குழு

*மாரி மகேந்திரன்*
*பொன்பிரபாகரன்*
*பிரேம்*

கணனிவடிவமைப்பு

K.*பிரபாகர்*

தொடர்புகளுக்கு

*மாரி மகேந்திரன்*
*#151, பிரதானவீதி*
*பொகவந்தலாவ.*
*இலங்கை.*

*Marie Mahendren*
*#151, Main Street,*
*Bogawantalawa.*
*Sri Lanka.*

# மானுடத்தின் கனவுகள்.

இரு நூற்றாண்டுகள்
இந்த மலைகளின்
நதிகளை நிறைத்த கண்ணீர்த்துளிகள்!
உப்புக்காற்றை உறிஞ்சிக்கொண்ட
தேயிலைச் செடிகள்
மாறிவரும் பாறைத் தொடர்கள்
மங்குமொளி சூரியனாய் மாற்றிடும்
பணிகளுடே, பணிந்திட்ட
மானிட வாழ்வு

இந்த மானுடத்தின் கனவுகளை,
கற்பனைகளை
சுமந்துவந்த ஏடுகளின் வரிசையில்
இன்னொரு புதுவரவு...
போராட்டங்கள்
புயலுக்கு முந்திய மயான அமைதி
மாற்றான் செழிப்பதற்காய் ......
உழைத்து உழைத்து ஓடாகிப்போன
மானிடம்..........
திரட்சிகொண்டு மீண்டெழும்
நிகழ்வு "அகசலனம்" ஊடாக
அரங்கேறுகிறது.
வாழ்த்துவோம்! வரவேற்போம்.
இன்னொரு வரலாற்றுப் பயணத்திற்கான
சாலையிடுவோம்.

-ஆசிரியர் குழு-

5309

# எழுத்தும்... வாழ்வும்... சிந்தனையும்

• •

துயர் மிகுந்த வாழ்வுக்கான காரணங்களில் புலப்படுவது எல்லாம் அவநம்பிக்கையூட்டும் எழுத்துக்களாக வெளிப்படுவதன் வரலாற்றின் முன் நாம் வந்து சேர்ந்திருக்கின்றோம். நாம் வாழும் இந்த வாழ்வு ஏன் துயரமாக, கடினமானதாக, அவநம்பிக்கை மனசோர்வு, காதல் தோல்வி, பயம், தடுமாற்றம், மனக்குழப்பம், பொருளாதர நெருக்கடி, வேலையின்மையின் விரக்தி, அரசியலின் தீர்க்க தரிசனமற்ற தற்காலிகமான சுயநலவாதம், குறுங்குழு மனப்பான்மை நம்மையும் நம் எல்லாவிதமான இரும்பின் வண்ணங்களை கரைத்து அழித்தொழித்தபடி இருக்கின்ற காலத்தின் ஒரு கொதிப்பு கனங்களின் முன் நாம் நம் கவிதைகளிலும் இந்த இருப்பின் அவநம்பிக்கையை எதிர்கொள்வதற்கான சுயமற்று விரக்தி எழுத்துக்களை எழுதி குவிப்பதன் அர்த்தம் என்ன?

நம் சூழலில் இளம் கவிஞர்களில் கவிதைகளை முன்வைத்து அகசலனத்திற்காக தேர்வு செய்ய முற்பட்டபோது, எல்லா கவிதைகளிலும் பெரும்பாலும் அவநம்பிக்கை, தோல்வி மனப்பான்மையின் வெளிப்பாடாக இருந்ததன் காரணத்தினால் நம் மலையக சூழலின் எழுத முனையும் தன் முனைப்பு கொண்டவர்களின் கவிதை குறித்த போதாமை நிறைந்த காரணங்கள், கவிதையின் உயிர்ப்பு வெறும் நிரப்பப்படும் வார்த்தைகளில் இல்லை, வெற்று வார்த்தைகளின் சேர்மானங்களின் எவ்விதமான உள்ளீடும் இல்லாமல் வெறும் வார்த்தைகளை எழுதி விடுவதென்பது மாணவர்களின் ஆரம்பகால குழந்தைகளின் கவிதைகளுக்கு பொருந்தி போகலாம். ஆனால் நம் முன் குவிந்து கிடக்கும் வன்முறைகளுக்கு – உளவியல் நெருக்கடிக்கு முன் நாம் இன்னும் நம் துயரமான வாழ்வை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டியதன் முதல் கடமையாக தென்னிந்திய ஆபாச எழுத்து வியாபாரிகளான வாலி, வைரமுத்து, ராஜேஸ்குமார், பாலகுமார் போன்றவர்களின் எழுத்து மாலையிலிருந்து விடுபட்டு தீவிரமான சிறந்த நவீன கவிதைகளை தேடி படிப்பதற்கான சூழலின் தேவையை உணர வேண்டும். பொது மன நிலையிலிருந்து எழுதப்படுகின்ற நுண் அதிகாரத்தின் மன வெளிப்பாட்டு எழுத்து வடிவங்கள், கலை படைப்புகள் மேலும் மேலும் மனிதனின் சராம்சத்தை விரக்திக்கு இட்டுச்சென்று விடும் ஆபத்து இருக்கின்றது. வாழ்வின் மீதான இறுதி நம்பிக்கைக்கும், எதிர்காலம் குறித்த தேடலுக்கும், சுய வாழ்வின் பிடிப்புக்கும் புதிய வழித்தடங்களை, அர்த்தம் கொண்ட சிந்தனைகளுடன் ஆழமான புரிதனலின் தன்னுணர்வுடன், மொழி, கலைத்துவம், கவித்துவம், வாழ்வின் உற்று நோக்கும் தன்மை, மேலும் புலப்படுவதற்கான புதிய கவிதைகளில் வாசிப்பும், தீவிர தேடலும் நம்மவர்களுக்கு தேவை. தமிழ்தின விழாவிலும், அரச விழாக்களிலும் எழுதும் நம் அவசர பேனா, நமக்காக, நம் சக மனிதர்களின் துயரங்கள் போக்க எழுத முயன்றிட வேண்டும். **புதிய களங்களை தேடி நம்மவர்களின் எழுத்தும். வாசிப்பும் நகர வேண்டியதன் காலத்தின் கட்டாயம். நம்முன் உறுதிபட நிற்கின்றது. தவறாது இருப்போம்!**

• •

காதல் வாழ்வின் மீது செலுத்தும் தாக்கம் சக்தியானதுதான், ஆனால் காதலை நம் சமூகம் தீண்டாமையாகதான் பாரக்கின்றது. காதல் மற்றும் நம் தென்னிந்திய திரைப்பட பிம்பங்கள் நம் இளைய சமூகத்தின் அறிவை, திறனை, கல்வியை, ஆற்றலை இல்லாதொழித்து வாழ்வை நிர்மூலமாக்கியபடி இருக்கின்றது. பாலுணர்வு பற்றிய பெரும் குற்றவுணர்வும், அந்தரங்கமும் ஆண் ஆதிக்கம் கொண்ட சமூக கட்டமைப்பு கொண்ட நம் பொது சமூக வெளியில் காதலுக்கான மூல விதைகள் ஆபாசமாக தூவப்படுவதன் ஆண் காதல் மொழிகளின் மாயையில் நாம் சிக்கியிருக்கின்றோம். இத்தகைய சூழலில் காதல் என்பது பாலுணர்வாய், சாதியாய், மதமாய், வர்க்க சமூக அதிகாரமாய் இருக்கின்ற அதிகாரத்தின் வேர்களின் முன் காதலை நாம் கவிதைகளில் இலக்கியங்களில், காவியத்தில் தான் ரசிக்கின்றோம். இயல்பு வாழ்வில் காதல்மேல் கொள்ளப்படும் வன்முறை கரங்களுக்கு முன் நம் காதல் கவிதைகள் அதன் அசல் சமூக அரசியலை ஏன் எழுத மறுக்கின்றது? காதலை ஏகாந்தமாக எழுதுவதனால் தான் காதல் எழுத்திலும், பிம்பத்திலும் மட்டும் உயிர் வாழ்கின்றது. காதல் வெறும் பாசாங்கு உணர்வின் வெளிப்பாடாக நம் கவிதைகளில் சுருங்கிப்போனபடி இருப்பதோடு, அதிகார மாயையின் இறுக்கமான பிடி நம் இளைய சமூகத்தை யதார்த்தம் நோக்கி மனதை செலுத்தவிடாமல் திசை திருப்பி வெறும் உடல் ஆபாசமாக களியாட்ட பொழுதுகளின் உடல் தடவி புசிக்கும் சடங்குகளின் தீர்ந்து போனபடி இருப்பதன் உளவியலை நம் எழுத்துக்கள் இனம் கண்டறிய வேண்டும். சமூக சிக்கலின் இடைவிடாத உள் முரண்பாடுகளின் அகழப்படாத தோற்றத்தை நம் எழுத்துக்கள் பச்சை தேயிலையின் தேநீர் நிறத்தைப்போல் அப்பட்டமாக வெளிப்படுத்த வேண்டும்.

• •

இலங்கையில் தற்கொலைகள் அதிகமாக நிகழும் மாவட்டமாக நுவரெலியாதான் என கணக்கெடுப்புகள் குறிக்கின்றன. அண்மையில் ஒரு பாடசாலை மாணவியும், காதல் தந்த எதிர்ப்பினால் ஒரு இளம் பெண்ணும் என் ஊரில் மரணத்தைத் தேடிக்கொண்ட செய்திகளுடன் அது குறித்த ஏக்கம் கவிழும் மனத்துடன் பகிர்வதற்கான நிலமற்று தொடர்கின்றது. வாழ்வின் சாளரங்கள் தற்கொலைக்கான மனது என்பது நம்பிக்கை தீர்ந்து விட்டதன் காரணியுடன் சமூக, அரசியல், பொருளாதார, கலாசாரத்தின் அழுத்தும் காரணிகளும் அதற்கான நுண் அளவிலான காரணிகளாக இருப்பதன் பின்னணியை மறுப்பதற்கில்லை, தற்கொலையைத் தூண்டும் பின்புலத்திற்கு முன் நம் இளைய சமூகம் பின்தொடர்வதன் நோக்கம் ஒன்றும் புதிதானதல்ல. பெரும்பான்மையான தற்கொலைகளுககு பின் காதல் ஒரு பாடுபொருளாக மாறியிருப்பதன் காரணத்தை ஆய்வுடன் கணிக்க வேண்டும். காதல் எல்லா சமூகத்திற்கும் அதிகாரத்தின் இருப்பை உடைத்தெறியும் சமூக குறியீடாக இருப்பதனால்– காதலை நாம் மறுக்கும் வரையும் தற்கொலைகள் முடிவின்றி தொடர்வதை நிறுத்திவிட முடியாது. காதல் சாதியாக, மதமாக, வர்க்கமாக, கௌரவமாக பொது சமூக அளவீடுகளில் தீர்மானிக்கப்படுகின்றது. ஆனால் மனிதனின் இயற்கை உணர்வாக என்று இந்த சமூகம் உணர்ந்துகொள்ளுமோ அன்று பல்வேறு பரிமாணங்களும் மாற்றத்தைச் தேடிச் செல்வது உறுதி காதல் ஒரு

வகையில் சாதிய, ஆணாதிக்க, வர்க்க சமூகத்திற்கான போராளிதான். ஆனால் இந்த காதல் போராளியை மரணத்தை நோக்கி தள்ளாலாமல் வாழ்வை வாழுத் திசை நோக்கி நகர்த்துவோம். தற்கொலைக்குத் துணியும் அதே நெஞ்சுறுதியை வாழ்வதற்காக ஒரு நிமிசம் இடைமறித்து திசை திருப்பினால் என்ன? மேலும் நம் மலையக மலைச்சாரல் எழுத்தில் வாழ்வை நம்பிக்கையுடனும், உறுதியடனும் வாழ்வதற்காக எழுதுவோம். மூன்றாம் தரமான போலி எழுத்து அதிகார குப்பைகளிலிருந்து, சினமா படங்களிலிருந்தும் மீண்டெழுந்து நம் சுய வாழ்வின் தீரத்துடன் எழுதுவோம். சிந்தனையும் எழுத்தும் வாழ்வை உயிர்ப்புல்லதாக மாற்றுவது உறுதி. மேலும் ....

சமூகம் விடுதலை பெறவில்லை என்பதற்காக எந்த ஒரு தனி நபரும் தற்கொலை செய்வதில்லை, ஆனால் தனிப்பட்ட காரணங்கள் ஒவ்வொரு தற்கொலையின் சாவுக்கு பின்னும் இருப்பதனால் நாம் இதை ஒரு சமூக பிரச்சினை என்ற நிலைப்பாட்டிலிருந்து தவறிப்போய் விடுகின்றோம். வாழ்வின் விளிம்பில் தொங்கும் மலையக மானுடத்தின் வாழ்வாதாரங்கள் வெறும் விரக்தியில், அற்ப காரணங்களில், தேங்கி போனதன் காரணம் தான் என்ன? கலை, இலக்கியம், சினமா, ஓவியம், சிற்பம், இசை என்கிற மானிடத்தின் ஆன்மீக மனத்தின் தேவைகள் நிராகரிக்கப்பட்டு நம் சமூகம் பின்தங்கி போனதன் ஒரு விளைவும் இலக்கிய, கவிதை, என்ற கலை அடையாளங்கள் பேசும் மனிதர்கள் சாதிய தீண்டதமையுடனும், பிழைப்பு அற்ற பிரதேசிகள் என்ற சமூகவியலை மற்றும் பொருளாதார நலத்துடன் நோக்கும் பார்வையும் நம் சமூகவியலில் கலை, இலக்கிய, காத்திரங்கள் பின்னடைந்ததன் காரணமும், குடும்ப. உறவில் நிலவும் பேச்சற்ற வெளிகளில், தனிமைப்படும் மனித கதாபாத்திரம், ஒட்டுமொத்தமாக திணிக்கும் கலாச்சார மதம், கடவுள், என்கிற பேய்களின் பிடியில் சிக்கி இயற்கையின் தன்மைகளை இழந்து கலாச்சார பலாப்பிசினில் அகப்பட்டுக்கொண்ட நரக வேதனையின் வெளிப்பாடுதான நம் மலையக சூழலில் நிகழும் தற்கொலைகள், தற்கொலைக்கான ஒரே தீர்வு வாழ்வதற்கான நம்பிக்கையை எங்கிருந்தாவது வழங்க வேண்டும். அது வானத்திலிருந்து சூனியத்திலிருந்து பெற்று விட முடியாது. வாழ்வின் புதிர் வெளிகளை, புரியாத தருணங்களை மீட்கும் கலை, இலக்கிய, சினமா, கவிதைகளினால்தான் இந்த தற்கொலை சமூகத்திற்கு சுய மருத்துவம் செய்ய முடியும். எழுத்தும், சிந்தனையும் வாழ்வை மற்றும், சமூக ரீதியான தோற்றத்தை திசை திருப்பும் இப்போது தேவை வாசிப்பும், எழுத்தும் சிந்திப்பும் தான் நம் எல்லாவிதமான கடினங்களுக்கும் தீர்வாக இருக்க முடியும்.

● ●

மாரி மகேந்திரன்

ஈரப் பிசுப்போடு ஒரு நிமிடம்
உட்கார்ந்து இருப்பீர்களா?

ரத்தப் பெருக்கோடும்
உறங்க வேண்டியிருக்கு.

மனதை மட்டும் தூக்கிக் கொண்டு
அலைகிறீர்கள் தானே?
கட்டுகள் ஒழிந்து என்றாவது
விட முடிந்திருக்கின்றதா இந்த உடம்பை?

தளர்ந்து போனால்
தாங்க மடி வேண்டும் தானே?

அடிவயிற்றில்
பிரபஞ்ச பூ தத்தின்
மூலாதார அவஸ்தையோடு

பிறப்பின் வாசம்
உடலெங்கும் பரவி நிற்க

ரத்தம் தேய்ந்த ஆடைகளோடும்
நடுங்கும் கால்களோடும்..
சாய்ந்து கொள்ளத் துழாவுகிறோம்.

'தொடாதே' தள்ளி நில்
என்கிறாள் அம்மாவும்
எறும்புக்கும் நாய்க்கும்
எப்படியோ இந்த அவஸ்தை.

●

அ.வெண்ணிலா
*நன்றி-தொரட்டி*

# நீர்வெளிகளில் காட்சிகள்

ஊச்சாங் நதியின்
மீனை திண்றுவிட்டு
தற்சமயம்தான்
சாங்கி நதியிலிருந்து
நீரை அள்ளி பருகினேன்

ஓர் சமயம்
சூவின்னுடைய வானத்தை
திறந்து பார்த்த பின்னர்
இப்பொழுது நான்
மாபெரும் யாங்சி நதிக்கு
குறுக்கே நீந்திக்கொண்டிருக்கிறேன்

நெடுந்தூரத்திலிருக்கும்
கோட்டையை சூழ்ந்து
வளைத்து சுழன்றடிக்கும்
காற்றுக்கும்
அலை மோதுகின்ற அலைகளுக்கும்
மத்தியிலும்
நான் காலடி எடுத்து
வைக்கின்றேன்....

இன்று நான்
இளகுவாக இருக்கின்றேன்
இது ஒரு கொதிப்பு நிலை
என எஜமான் சொன்னார்
அதற்கேற்ப அது
நகர்ந்து செல்லட்டும்

காற்றோடு கடலோட்டம்
நகர்கின்றது

# நீர்வெளிகளின் காட்சிகள்

ஆமைகளும் முதலைகளும்
பாம்புகளும்
கிடக்கின்றன

மாபெரும் வெளிகள்
முன்னே தெரிகின்றன
ஒரு பாலம்
வடக்குக்கும்
தெற்குக்குமாக விரிந்து
அகழ்கின்றது
ஆழ் சுளியை
நோக்கி
திரும்புகிறேன்

முன்னே
ஊசானின்
மலைகளுக்கும் முகில்களுக்கும்
பின்னே
மேற்கே கற்களிலான
பெரும் சுவர்கள்
எழுந்து நிற்கின்றன
குறுகிய வாயிலை நோக்கி
ஒரு மிருதுவான வாவி
படர்ந்திருக்கின்றது

மாபெரும்
மலைகளின் கடவுள்
இன்னும் அங்கு இருந்தால்
மாறும்
உலகிற்காக
ஆசீர்வதிக்கட்டும்!

● ●

ஆங்கிலம் மூலம் தமிழில்
- *பொன் பிரபாகரன்*
- *மாரி மகேந்திரன்*

●

கத்தரீனா
காவு கொண்ட
நியூ ஓர்லியன்ஸ்
நீக்ரோ அடிமைகள்
சிந்திய வியர்வையில்
செழித்திருந்தது..!
கருப்பினப் பெண்களின்
கருவறையூடே நீந்திப்புகுந்த
வெள்ளைப் பிசாசுகளின்
விந்தணுக்கள் விளைத்த
கறுப்பு கருச்சிதைவுகளின்
உக்கலின் புஷ்டியில்
விளைந்த நிலங்கள்.
அங்கே வெள்ளைத் திமிருக்கு
வெம்மையூட்டின..
செம்மையாக்கியான ...!

வேசிகள் .........
தாசிகள் .........
நீசர்கள் .....
மூடர்கள் .........
என
வெள்ளைத் திமிரால்
வீசியெறியப்பட்டவர்
விளைத்த நிலங்களில்
முளைத்த பயிர்களை
உண்டு புசிப்பவர்:
கருப்பின பெண்களின்
கழிவுண்டு வாழும்
சிவப்பின பன்றிக்கறிதனை
சுவைத்து புசித்து
வெள்ளைத் திமிறை
விறைப்புறுத்திக்கொண்டு
விரைவாய் வளர்ந்தனர்.........:

கத்தரீனா
காவுகொண்ட
கருப்பினக் குரல்களை
காகங்கள் காவி சென்ற
இறைச்சி துண்டுகளை.
பார்த்து மகிழ்ந்தனர்;
பரசவமாகினர்.

என்னே
வெள்ளைத் திமிர்.....?
"இன்கா"க்களின்
பிணத்தினை திண்று
"சியாட்டல்"களின்
குருதி புசித்து -
நீக்ரோக்களின் - மச்சையை
உறிஞ்சி........

இன்னும்
மானுடம் முழுதும்
புசித்திட கூடும்
நீசரின் வாழ்வை
நசித்திட போகும்
மானிட புயல்களின்
முன்னே
இத்திமிர்
மண்டியிட்டு விழும்
நாள் ஒன்று வரும் ......!

11.9.2005

# மனிதனாயிரு

நீ – மனிதனாயின் மனிதனாயிரு
ஆட்டுவிப்பார் தம்வழியில்
ஆடுகின்ற பொம்மையென
நாட்டு மக்கள் உன்னைக் கண்டு
நகைத்திட நீ வாழ்வதுவோ ?

வல்லரக்கர் சினங்கண்டு
வாழ்மடக்கும் நாயெனவே
புல்லர்களுக்கு அஞ்சுவதோ
புரிபோர் நீ ! நிமிர் தலையை......

மனிதனாயின் மனிதனாயிரு
வாய் நோக பேசுகின்ற
வார்த்தையினும் தனையின்ற
தாய்நாட்டின் குடுப்பணியே
தான் முந்திப் பேரொலிக்கும்

ஆங்காரப் புயல்போல்
அழித்திடுவாய் ஆக்கிடுவாய்
போர்க்காலம் வரும்போதும்
பொறுப்புக்களை பிறர்க்கீவாய்

நீ – மனிதனாயின் மனிதனாயிரு
உயர் பண்பும், நாணயமும்
உரமாக பேணிவளர
உயிர் போக நேரிடினும்
உறுதியுடன் இவைக்காக்க
தன்னுயிரே போயடினும்

தன்மானம் காத்திடுக
என்னைப்போல பெரியவன் யார்?
இருமார்புப் போக்கிடுக
நீ மனிதனாயின் மனிதனாயிரு

வானுலகம் ஈந்திடினும்
வானகமே விடுதலையும்
தானுலகில் வாழுதற்காய்
தனைவிட்கும் கீழ் மகளை
சீயெனவே உமிழ்ந்திடுக
திருவோடும் தூக்கிடினும்
நீ என்றும் உரிமை பெற
நினையாக போரிடுக !
நீ – மனிதனாயின் மனிதனாயிரு

நெஞ்சதனில் உறங்கொண்டு
நேர்நிற்கும் ஆண்மகனை
கொஞ்சமுமே அசைக்காது
கொடுமுழிப் பெரு வலியும்

ஓலமிட்டே பெருங்காற்றும்
ஒன்றுபட்டு சாடிடினும்
ஆலமரம் பெயருமல்லாது
அதன் கிளைகள் வளையாது

***சான்டோர் பெட்டேர்.:.வ்பி***
***தமிழாக்கம்:***
***அமரர் கே.கணேஷ்***

# (கு)நீர்த்துளிகள்

சுதாஜினி

•

ஆங்காங்கே சொட்டுச்சொட்டாய்.
சிதறிக்கிடந்தன
குழம்பிப் போய்
இடக்கையை பின்னூற்றி
கால்களை கீழிட்டு அமர்ந்திருந்தேன்
வலக்கையில் தேநீர்
மனம் எதையோ நினைத்து
குழம்பியிருந்தது
கண்ணீர் ஊற்றின ஓடைகளும்
முகத்தில்,

அவற்றினையும் பார்த்து விட்டனபோலும்
நிரந்தரமாக அவற்றுடன்
கலந்து விடலாம் என்ற
நப்பாசை கூட இருந்திருக்கலாம்
அவற்றுக்கு,
பரவாயில்லை, துணியால் துடைத்தேன்
சிறிது நேரத்தில் வெப்பம் தோய்ந்து
பனித்துளியாக அவ்விடத்தில்
காட்சியளித்ததை
பார்க்க மறந்து எழும்பி நடந்தேன்
வழுக்கின கால்கள்
சீமெந்து தரையில் திசைமாறி விழுந்தேன்
இப்பொழுது
கண்ணீரோடைகள் ஆறாகின

சிற்சில நேரங்களில் நான்
விழுவதும் பின் எழுவதுமான
வாழ்வின் நிரகதிகளின் முன்
நான் இன்னும் பிறவும்
எதிர்வுகூறும்
நம்பிக்கையுடன்

• •

நீண்ட
அவநம்பிக்கை சூழும்
இருட்டு வரிகளுடன்
நடந்து வந்தோம்.....

இனி
எல்லா விதமான
இருள்களுக்கு முன்னும்
எழுந்து நிற்போம்

சூனியங்களின்
இருப்பு கலைந்து
புதிய வரிகளின் முன்
நம்
தலைமுறைகள்
கொப்பளிக்கட்டும்
●●

**மாரி மகேந்திரன்**

# சூளுரை

**சமீர் அல் காசீம்**

பாலஸ்தீன கவிதை

என் காணியின் கடைசித்துண்டையும் பறித்தெடு
என் இளமையைச் சிறைக்கூட்டினுள்ளே புதைத்திடு
என் முது சொத்தை கொள்ளையடி
என் கோப்பைகளில் உன் நாய்களுக்கு இரைபோடு
போ...........
என் ஊரிலுள்ள கூரைகளில் மீது
உன் பயங்கரவலைகளை விரித்திடு

மனிதனின் எதிரியே.......
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

என் கண்ணெதிரே
நீ எல்லா விளக்குகளையும் ஊதி அனைத்தாலும்
உதடுகளின் முத்தங்கள் அனைத்தையும்
உறைவித்தாலும்
என் நாட்டின் காற்றினைச்
சாபங்களால் நிறைத்தாலும்;
என் ஒலமிடும் குரல்வளைகளை
அமுக்கி ஒடுங்கினாலும்;
என் காசு போல் பொய்காசு தயாரித்தாலும்;
என் பிள்ளைகளின் முகத்து முறவலைப்
பிடுங்கி எடுத்தாலும்
இகழ்ச்சி ஆணிகொண்டு
என் விழிகளில் அறைந்தாலும்;

மனிதனின் எதிரியே
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.

மனிதனின் எதிரியே
துறைமுகங்களின் சைகைகள் உயர்த்தப்பட்டுவிட்டன.
காற்றெங்கும் அழைப்புக்கள் நிரம்பிவிட்டன.
எங்கெங்கும் அவை தெரிகின்றன.
அடிவானத்தில் கப்பற் பாய்களை காண்கின்றேன் .
முயன்று இடர்மீறி இழப்பு கடலினின்றும்
யுலிசர்சின் கப்பல்கள் மீண்டும் வருகின்றன.

பொழுது புலர்கிறது. மனிதன் முன்னேறுகின்றான்.
அவன் பொருட்டாக நான் சத்தியம் பண்ணுவேன்.
நான் விட்டுக்கொடுக்க மாட்டேன்
இறுதிவரை போராடுவேன்.
போராடுவேன்!

●●

# கார்ல் மாக்ஸ்

**கல்லூரி நாட்களில் எழுதிய கட்டுக்கடங்காத கவிதையிலிருந்து**

ஒருபோதும் நான் அமைதியாக
சும்மா இருக்க முடியாது
என் ஆத்மாவை எந்தவொரு
தடைதான் சூழ்ந்து நின்று
முற்றுகை தானிட்டாலும்
ஒரு போதும் நான்
ஓய்ந்து தளர்ச்சி கொள்ளமுடியாது
முடிவற்றதொரு
போராட்டத்திற்காக
தனியாக போராடுவேன்-நான்.

நாம்மெல்லாம் ஒன்றிணைந்து
செய்து முடித்திடுவோம்
முயன்றதனைத்தையும் துணிகரமாய் ...
ஓயவில்லை, ஒழிக்கவில்லை?
நம்பிக்கை நிரம்பி வழிய
எல்லாம் செய்வோம்
எப்போதும் வீடு, பேனா
கவலை மிகுந்து மனமுறிவு
ஏதும்மின்றி
வேதனை மிகுந்த நுகத்தடியில்
நிலைகுனியும் நிலையற்று,

நம்பிக்கை நிரம்பி வழிய
எல்லாம் செய்திடுவோம்!
எப்போதும் விருப்போடு
நம் - முயற்சிகளும், ஆசைகளும்
அருஞ் செயல்களும்
நம் நம்பிக்கையும் - துணிவும்
என்றென்றும் நிலைத்து நிற்கும்

● ●

நன்றி:
மனஓசை

# இரண்டு கவிதைகள்

● ஹவி

அடர்ந்து நெளிகிற மௌனத்தின்
திரைச் சீலையின் மீது
நான் வீசி யெறிந்த
சொற்களின் தீப் பொறியால்
எரிந்து போய்விட்டது
நீ எனக்கு பரிசளித்த
கனவின் வண்ண ஓவியம்
திரைச் சீலை கருகிய பின்னான
அச் சன்னல் வெளியின்
வழியே
விழித் திரைக்குள்
வெளிச்சம் கொண்டு வந்தது
பச்சையத்தின் உயிர் துடிப்புடன்
ஒரு புதிய ஓவியத்தை
உன் நேசத்தின் தடயங்களைத்
தேடி
அவ் வோவிய உலகுள்
பறந்து போனது பார்வை
ஒரு வலியுற்ற உயிரியாய்
ஒரு விடுதலை பெற்ற பறவையாய்

●

●

மழை நேரம்

அவன் கவிதை

இதைத் தனிமை

உன் ஞாபகம்

பேசியில் உறையும் மௌனம்

எனது திணறல்கள்

உனக்குப் புரியுமா என்பது

எனக்குப் புரியவில்லை

காற்றாடியின் சுழற்சியாய்

மனதில் உணர்வுகள்

மழை பார்க்கும் வாசலில்

அம்மாவின் நினைவு எதை மீட்டும்

நானோ

உன் வீட்டு நாய்க் குட்டியென

சுற்றி சுற்றி வருகிறேன்

உன் மடியில் தலை சாய்ந்து

சில கதைகள் பேச

பல ஒளி ஆண்டுகள் தாண்டி

இருக்கும் நட்சத்திரமானவளே

உனக்கோ நிறைய

வேலை யிருக்க கூடும்

கட்டிலுக்கடியில்

சுருண்டு கிடக்கிறது நாய்

வாஞ்சையுடன் என் போல

நீ புரிந்து கொள்ளாத

என் தனிமை போல.

● ●

# சி.வி யின் படைப்புக்களிலிருந்து

சட்டம் கொடுமைக்
கெடுபிடிப்போமோ?
சர்வாதிகார
ஆணவம் போமோ?

கட்டி வதைக்கினும்
சுதந்திரத் தீச்சுடர்
கனலின் எழுச்சியை
அழிக்கவும் போமோ?

ஆப்பினைச் சம்மட்டி
அறைய எழுந்தீ
ஆப்பின் அறைக்கும்
ஆடங்குவதாமோ?

தோப்பு மரங்களைப்
பிளந்திடும் போது
தெறிக்குந் தீப்பொறி
தொடராது போமோ

- ஆனால்

மனிதனின் நாமத்தை
மனிதன் வணங்கவும்
மனிதனே சிலுவைமேல்
வடிப்பான்:

புனிதமாம் சுதந்திரச்
சோதிச்சுடரின்பப்
பூரண எழுச்சியும்
படைப்பான்

நூறாண்டு காலமாய்
நுழைந்த இவ்விருட்டை
வேரோடழிக்க
என் தமிழ் மக்கள்

கூறுவர் சிகர
உச்சியில் ஏறிக்
கூறுவர் திடல்கள்
யாங்ஙனு மடுக்கவே

விடுதலைக் குரலது
வெற்றிக் குரலது
வீரக்குரலது
விரைந்தெழும் கேட்பீர்!

அடிமை நிலையை
அகற்றவும் அழைக்கும்
அன்புக் குரலது
அன்பரீர் கேட்பீர் !

வாக்குரிமையோடு
வளநாட்டுரிமையும்
ஊக்கமும் வெற்றி
ஒப்பிடுங்காலம்

பூக்குமே யந்தப்
புண்ணிய நாள்தனில்
ஆக்கம் புரிந்தவர்
அமைதி இழந்தவர் !

மூச்சிலே சுதந்திரத்
திருக்கலந்திடுமே:
மூச்சிலே விடுதலைச்
சுகம் மலர்ந்திடுமே

பேச்சிலே வீரமும்
உறுதியும் மாட்சியும்
பிறந்திடும் வெற்றிப்
பெருவாழ்வாமே

•

ஆங்கில மூலம் :
**சி.வி. வேலுப்பிள்ளை**
தமிழில் :
**சக்தி அ.பாலையா**

## நீலத் தீ சுவாலைகள் மேவும் தண்ணீர் தேசம்...

தண்ணீர்?
இந்த மலைகளையும்,
நதிகளையும்,
படைத்தவனனல்ல மனிதன்-.
ஆயினும்,
இந்த மலைகளையும்.
இந்த நதிகளையும்.
மனிதனுக்குரியவையாக்கிய மானுடம்:
செத்து வீழ்ந்து
கிடப்பதற்காய்(?).
செதுக்கிய சிற்பமாய்,
நீண்டுயர்ந்த பாறைகளினுடே
ஒரு நூறு நதிகள் -
இங்கே

ஊற்றெடுத்து பாய்கின்றன...
நதிகளின் ஓட்டத்தை போல்.
செழிப்பானதல்ல - இந்த
மானிட வாழ்வு.
ஆயினும;
மனிதன் நதிகளை நேசிக்கின்றான்
யௌவனமிக்க
இந்த நதிகளின் இடைகளை
முறித்து
பாடைகட்டும் மானிட
வாழ்வை
இந்த நதிகளும்,
மலைகளும்
விழுங்கிடும் விபரீத குரல்களை,
புயலாய்...
எரிமலையாய்...
பெரும் தீயாய்...
கடல் கோளாய்...

காவு கொள்ளும் மானிட
வாழ்வுதனை
மீட்டிடுமோ மானிட
ஆற்றல் .... ?

மானிடத்தின் செழிப்பினை
மகத்தானதாக்கும்
நெடிந்துயர் மலைகளையும்
துள்ளி பாயும் நதிகளையும்
நாளைய மானிடம்
செழித்திருக்க
போர்த்தி வைப்போம் ....!

மலையிடை மரித்து
அணைகளை எழுப்பும்
நிலையில்லா திட்டங்களை
நீக்கிட துணிவோம்

மனிதம் தனைக்காத்திட
போரிடுவோம்
அது போல
நண்பர்களே...!
இந்த நதிகளையும்
மலைகளையும் காத்திடவும்
போரிடுவோம்...!

●●

**உடுக்காண்டி**
14.11.2005

# இம்முறை வசந்தம் எப்படி வந்தது

(ஏப்ரல்.15.1994)

*மலையாள மூலம்:*
**சச்சிதானந்தன்**

*தமிழில்:*
**நிர்மால்யா**

இடிமுழங்கவில்லை:
கழுகுகளின் வானவில்களின் கீழ்
எங்கள் படைக் குதிரைகள்
திரும்பிக் கொண்டிருந்தன.
ஒவ்வொரு குதிரையின் மீதும்
கட்டி வைக்கப்பட்ட ஒரு போர் வீரன்
மார்பில் ஈட்டி
சொருக்கப்பட்ட நிலையில்.
அல்லது
தலை கொய்யப்பட்ட நிலையில்
சில குதிரைகள் ரத்தத்தில் ஊறிய
மூட்டைகளை சுமந்து வந்தன:
அதில் பெரு விரல்களும்
ஆண் உறுப்புகளும்
இது இறுதி யுத்தம்
இனி நமது சிந்தனைகளுக்கு
வரி விதிக்கப்படும்
நமது ஒவ்வொரு சுவாசமும்
எதிரியின் பிரார்த்தனை
நமது படுக்கையறையில்
வேற்றுமொழிகள் ஒலிக்கும்
நமது குழந்தைகள் அனைவரும்
வெற்றியாளனின் சாயலோடு
காணப்படுவர்
அவர்கள் வளர்ந்த பிறகு
ஆண்மையற்ற பெற்றோரை நினைத்து
நாணுவர்
வெட்கம் தொற்றக் கூடியதல்ல எனவே
நாக்கு துண்டிக்கப்பட்ட குயில்களுடன்
நாமும் உயிர் வாழ்வோம்
வானரங்களின் நகரத்தில்
உழவுக் காளைகளின்
நிறம் இல்லாத வசந்தத்தில்
நாளை இல்லாத இடத்தில்

*நன்றி*
**தாமரை**

• •

# நவீன தமிழ் கவிதை பற்றி

திலீப்குமார்

நவீன கவிதை, தீவிரமான சுய அனுபவங்களின் வழி வெளிப்பாட்டின் பல்வேறு படிநிலைகளைப் பிரதிபலித்த வண்ணம் உள்ளது. இக்கூற்று, தற்காலத் தமிழ்க் கவிதைக்கும் பொருந்தும். ஆனால் தமிழ்க் கவிதைக்கு மற்றுமொரு கூடுதல் பண்பும் உண்டு. அது தீவிரமான சுய அனுபவங்களை ஆழ்ந்த சுய பிரஞ்சையோடு வெளிப்படுத்தல் என்பது. கடந்த பத்தாண்டுகளில் வெளியான கவிதைகளைப் பாரக்கும்போது, தமிழ்க் கவிதையின் அகவழிப் பயணம் மேலும் தீவிரமடைந்துள்ளது என்றே சொல்ல வேண்டும்.

**கேளிக்கை சார்ந்து அதற்கு முற்றிலும் ஆட்பட்டு மெத்தனமடைந்து விட்ட நம் கலாசார வாழ்வில் கவிதை ஒன்றுதான் தீவிரமான நல்மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதிலிருந்து துவங்கி, உணர்வுபூர்வமான அக உலகைத்தைப் புரட்டிப் பர்க்கக் கவிதையால்தான் முடியும்.**

இலக்கியப் படைப்புப் பிரிவுகளில் கவிதைதான் மிகவும் உயர்வானது என்று இலக்கிய அறிஞர்கள் தொன்றுதொட்டு பறைசாற்றி வந்துள்ளார்கள். கவிதை எழுதுவது அவ்வளவு சுலபமான காரியம் அல்லதான் என்றாலும் அநேகமாக எல்லாப் படைப்பாளிகளும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலேனும் கவிதையை நோக்கிச் செல்லாமல் இருந்ததில்லை. புதிதாக எழுத வருகிறவர்களும் பெரும்பாலும் முதலில் கவிதையையே எழுதுகிறார்கள். கவிதை என்ற வடிவத்தின் வசீகரம், ஒருவருடைய உள்ளார்ந்த இலக்கிய ரீதியான குறைநிறைகளை மீறித்தாக்கிவிடத் கூடியதாக இருக்கிறது. மோசமான கவிதை, நல்ல கவிதை என்ற விமர்சனப் பாகுபாடுகள் என்றுமே கவிதை எழுதுவதற்குத் தடையாக இருந்ததில்லை. மற்ற இலக்கியப் படைப்புகளுக்கும் இது பொருந்தும் என்றாலும் இன்று கவிதைகள் எழுதப்படும் அளவையும் கவிஞர்கள் காட்டும் துணிகரத்தையும் பார்க்கும்போது இதைக் குறிப்பிட்டுச் சொல்வது, பொருத்தமுடையதாகவே இருக்கும்.

ஒரு வகையில் கவிதை என்பதே ஒரு 'மிகை' வடிவம்தான். இம் 'மிகை' வடிவத்தின் உள்ளார்ந்த தன்மை, வாழ்வனுபவங்கள் மற்றும் யதார்த்தத்தின் பல்வேறு கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கும்போது கூட கவிதை என்ற வடிவத்தின் ஆதார மிகைத்தன்மை, இனம் காணக்கூடியதாகவே உள்ளது. கவிதை என்ற 'மிகை'யைப் பலரும் இயல்பாகப் பயில்வதற்கு அநேக சமூக இலக்கிய நியாயங்கள் இருக்கலாம். கேளிக்கை சார்ந்து அதற்கு முற்றிலும் ஆட்பட்டு மெத்தனமடைந்துவிட்ட நம் கலாசார வாழ்வில் கவிதை

ஒன்றுதான் தீவிரமான நல்மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதிலிருந்து துவங்கி, உணர்வுபூர்வமான அக உலகத்தைப் புரட்டிப் பார்க்கக் கவிதையால்தான் முடியும் என்பதுவரை, பல காரணங்கள் இருக்கலாம். சிறுகதை நாவல் போன்று பெரிதும் சிந்தனையும் கருத்தும் சார்ந்த உரைநடைப் படைப்புக்களை விடவும் கவிதையில்தான் படிமங்கள், உருவங்கள், ஓசை, லயம் ஆகிய நுட்பங்களை இழைப்பதற்கான சாத்தியக்கூறுகளும் சுதந்திரமும் அதிகம்.

இன்றைய தமிழ்க் கவிதையின் உட்பொருள் தெரிவும் வார்ப்பும் தற்காலக் கவிதையின் பெரும்பாலான நியதிகளை நிறைவேற்றுவதாகவே அமைந்துள்ளன. ஒரு சில கவிஞர்களைத் தவிர: பெரும்பாலான கவிஞர்களின் கவிதைகள், அந்தரங்கமான அனுபவத்தின் துல்லியமான விளக்கமாகவே நின்று விடுகின்றன. இதற்கப்பால் இவை நீட்சி பெறுவதில்லை. செம்மையான சொற்கள், படிமங்கள் இவற்றை கொண்டு உருவாக்கப்படும் கவிதை, தன் ஆதார அனுபவத்தை வாசக மனதிற்குத் தளமாற்றம் செய்வதிலும் அதைத் தொடர்ந்து உணர்வுபூர்வமான விகசிப்பை ஏற்படுத்துவதிலும் வெற்றியடைய வேண்டும்.

ஒரு படைப்பாளியின் அக உலகின் அலாதியான கூறுகளுக்கெல்லாம் இடமளிக்கும் வடிவமாக கவிதை இருந்தாலும் கூடவே அது பல சிக்கலான சவால்களையும் முன் வைக்கக்கூடியது. கவிதை என்பது அதன் உருவாக்கத்தில் எல்லா நிலைகளிலும் கடுமையான மன உழைப்பை வேண்டிநிற்கும் ஒரு வடிவம், கவிதையின் ஆரம்ப உந்துதல், வாழ்வனுபவத்தின் மிக அற்பமானதொரு துணுக்கிலிருந்து கூடவரமுடியும். ஆனால், அத்துணுக்கைப் பற்றிச் சென்று கவிதையாக்க முனையும்போதுதான் தன் போதாமைகள் பற்றிய நிதர்சனம், படைபாளிக்குத் தெரியவரும். இப்போதாமைகள் மொழி சார்ந்தவையாகவோ உள்ளீடு சார்ந்தவையாகவோ, எப்படியும் இருக்கலாம். இவற்றில் பல போதாமைகள் நிர்ணயிக்கப்பட்ட போதாமைகள் குறித்து கவிஞர் செய்வதற்கு அதிகம் ஒன்றுமில்லை. ஆனால் கடந்து செல்லக்கூடிய போதாமைகளை அவன் எதிர்கொண்டேயாக வேண்டும். இதற்குத் திறந்த மனதும், எல்லையற்ற பணிவும் அவசியம்.

●

**நரகத்திலிருந்து ஒரு குரல்**
கவிதைத் தொகுப்பின் முன்னுரையில்

**ஒரு சில கவிஞர்களைத் தவிர பெரும்பாலான கவிஞர்களின் கவிதைகள், அந்தரங்கமான அனுபவத்தின் துல்லியமான விளக்கமாகவே நின்று விடுகின்றன. இதற்கப்பால் இவை நீட்சி பெறுவதில்லை.**

"

*ஒவ்வொரு கவிஞனுக்கும்*
*கவிதையின் வெளிப்பாடு*
*ஒவ்வொருவிதமாக அமையும்,*
*சிலருக்கு காட்சி ரூபமாகவும்,*
*சிலருக்கு நேரிடையாக*
*வரிகளாகவும், சிலருக்கு*
*ஆரம்பத்தில் வெறும் உணர்ச்சி*
*ரூபமாகவும், இன்னும்*
*பல்வேறு விதங்களிலும்*
*கவிதை தோன்றக்கூடும்* "

ஆனந்த்

**ந வீ ன க் க வி தை க் க ள ம்**

கவிதையின் இருப்பை ஓர்
தீவிர இயக்கமாக
முன்னகர்த்தும்
வேட்கையுடன் முன்
வரும் நம் புரிதலுக்கும்
இலக்குகளுக்கும்
உரிய ஒத்துழைப்பை
வேண்டி நிற்கிறோம்.
நவீன கவிதைகள்
தொடர்பான விமர்சனங்கள்
கருத்துக்கள், நம்பிக்கைகள்
நவீன ஓவியங்கள்:
புதிய புரிதல்களுடன்
ஆழ்ந்த சமூக நோக்குடன்
வருவதற்கான களத்தை
நாங்கள் வரவேற்கிறோம்.
கவிதைப் பிரதிகள்
விமர்சனத்திற்காக
எதிர்பார்க்கப்படுகின்றன.

**தொடர்புகளுக்கு**
அகசலனம்
151, பிரதான வீதி,
பொகவந்தலாவ.
இலங்கை.

## நன்றி

- தலித்
- மலைகளைத் தவிரவும்
  எமக்கு
  நண்பர்கள் இல்லை
- ரஷ்யப் புரட்சி : இலக்கிய சாட்சியம்

# என்று மடியுமெங்கள் ...... ?

• பரசுராமன் சங்கர் •

எங்கோ விழுந்த வேட்டொலியில்
இறந்துபோன மானுடனின்
ஏக்கத்தால் கிடைத்தது
எமக்கும் சுதந்திரம்

இங்கே இன்னும் ஓர்சிலர்
இரட்சகர் தாமே என்று
பாவச்சிலுவையை நம்மேல் சுமத்தி
பாதையிலே ஊர்வலம் பேவார்

ஒன்றரை நூற்றாண்டுகள்
கழிந்துமின்னும் ஓர் இனம்
உண்ணும் உணவுக்கே
ஒப்பாரி வைக்கும் அவலம்

என்ன பெற்றுத்தந்தார்
எமக்கான இரட்சகரென்று
இருப்பதற்கு சொந்தமென்று
வீடு? காணி? நிலம்?

வாக்களிக்க உரிமையோடு
பிரஜாவுரிமை?
போராட்டமேதுமற்ற
சம்பளஉயர்வு?

சொந்தத்துடன் கூடி மகிழ
சுகாதாரமான வாழிடம்?
வளங்கள் பல நிறைந்த

கனவுகள் நனவாக்கும்
கல்விக்கூடம்?

எதற்காகவோ இன்னுமிந்த
அடிமைவாழ்க்கை?
யாருக்காக இன்னுமிந்த
யாசகத்துக்கான போராட்டம்?

விட்டு விடுதலையாகி
வெட்டவெளிப் புள்ளினமாய் -
நாம்
வானில் வட்டமிட்டுப் பறக்க
எல்லைகளை வரைந்தது யார்?

சமூக எதிர்பார்ப்பு
சந்ததியின் எதிர்காலம்
சாகா வரம்பெற்ற கலாசாரம்
சரிநிகர் சமான வாழ்நிலை

இவற்றை பெற்றுக்கொள்ள
ஏக்கங்கள் தூர்ந்துபோக
எமக்குள்ளே வேண்டும்
போராடும் குணமுள்ள
புதுப்புயல்கள்!

# மரணத்தை முன் உணரும்
## ஓர் ஐரிஷ் போர் விமானி

நான் அறியேன்!
எங்கோ......
மேகங்களினிடையே
என்றேனும்
என்விதியை நான்
சந்தித்தாக வேண்டும்.

யாருக்கெதிராய்ப்
போராடுகின்றேனோ
அவர்களை நான்
வெறுக்கவில்லை......!
என்னால்
அரணளிக்கப்படுவோரும்
என்
நேசிப்பிற்குரியரல்லர்....!
எனது நாடு கில்டர்டன் !

எனது நாட்டோர்
நலிந்த
கில்டர்டன் மக்கள் !
நிகழவிருக்கும் போரின்
எத்தகு முடிவும்
அவர்களுக்கென
இழப்பெதனையும்
இனி தரவியலாதது;
முன்பிருந்ததைவிட
மகிழ்ச்சிகரமாக்கவும்
முடியாதது....!

சட்டமோ, கடமையுணர்வோ,
பொதுமக்களோ,
உற்சாக மூட்டும் கூட்டமோ,
எதுவுமல்ல - போரிட
என்னைத் தூண்டுவது !

மீளவியலாத்
தனிமையுணர்வின் உந்துதல்:
மேகக் கூட்டத்தை
நோக்கியென்னை
விரட்டிச் செல்கிறது:
அனைத்தையும் கண்டுவிட்டேன்!
கற்றுக்கொண்டு விட்டேன்!
அனைத்தையும்
சமச்சீராய்க்காணக்
கற்றுக் கொண்டு விட்டேன்

வீணாகிப் போன சுவாசம்
பின்னால்
வரவிருக்கும் வருடங்களில்
உணரப் பெறும்!
இந்த
வாழ்வின் அவலத்தைச்
சமன்படுத்தும்
அந்த என்
மரணம்....!

W. B. YEAT

தமிழில் : **சிறிவித்யா**

# வசிக்கும் ஒற்றையறை

நான் கருத்தரித்தது
அப்பா வராத இரவுகளில்
அம்மா விசும்பிக் கிடந்தது
அக்காவுக்கு வயசுக்கு வந்தது
அம்மா செத்துக் கிடந்தது
இப்படி
எல்லாம் முக்கியமானவைகளும்
நடந்தேறியது
இவ்வட்டின்
ஒற்றையறையில்தான்.
எல்லா முக்கியமற்றதுங்கூட.

கால் நூற்றாண்டுக்குமுன்
செம்மண் குழைத்து
எழுப்பப்பட்ட
இதன் ஈரங்கசியும்
பக்கச்சுவர்கள் விழுந்து
நசுக்கும் கனவு தவிர்க்க
விழித்திருக்கும் இவ்விரவின் மீது
ஊர்கின்றன
பெயர் தெரியாப் பூச்சிகள்.

தானியங் காக்க வளரும் பூனை
பால்திருடிக் குடித்த களைப்பில்
கயிலிக்குள் சுரண்டிருக்க

மோட்டு வளையிலிருந்து
மார்பில் விழுந்து பிளந்த
எலிக்குங்சொன்று
ரத்தப் பிசுக்கோடு
துடித்தது முன்பு.

**செல்மா ப்ரியதர்ஸன்**

# உன் கழுத்தும் என் பாரமும்

செத்த உடலை
யாரோ
சுமந்து செல்கிறார்கள்...

ஞாபகங்கள் முட்டித் தள்ளும்
நெரிசலில் சொற்கள்
சுணங்கி விட்டன வெளிவர
முடியாமல்...!

திரை விழாவில்
நீங்கள் இல்லாத தனிமையில்
துவண்டு உலர்ந்தேன்

தற்சமயம்
தனிமை என்னை
திண்கிறது..!

"ஹவி" என்ற பார்ப்பான்
என்ற சொலவடை
புழக்கமாயிற்று...!

மனக்குழப்பமும்
உளவியல் ரீதியான
தனிமையும்
பொருளாதார நெருக்கடியும்
கொன்று திண்கிறது...!

சமீப காலங்களில்
திரைவிழா அனுபவங்கள்
மட்டுமே அற்புதமானதாக
இருக்கின்றது...!

நிகழ் வாழ்வு
தற் வெறுமை
வெற்றுப் புழதியுள்
புதையுண்ட வாழ்க்கை!

எப்படிப்பார்த்தாலும்
தீராமல் அலைக்கழிக்கிறது

வாழ்வு
நிதானப்பட கதியின்றி
சதா அலைவு...

என் ஆழ் கனவில்
இங்கு பல்வேறு முயற்சிகளில்
ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றேன்.

எது முடியும்
எப்படி முடியும் ?
எப்போது முடியும் ?
தெரியவில்லை...

முயற்சிகள் மட்டும்
தொடரும் முடிவின்றி
அதில் மட்டும் மனம்
அலுத்துவிடாத படி இருக்க
முயல்கிறேன்.

காலத்தின் புதிர் பாதைகளில்
மாபெரும் திரைக்கனவுகளை
சாத்தியமாக்கும்
எத்தனத்துடன் பயணமாவோம்....
அது ஒன்றே
நமது
வாழ்வு உய்ய வழி!

கலை மனதின்
தீராத போராட்டம்
எரியும் வாழ்வில் தீய்கிறது.
சருகுதிர்ந்த மரமாய்
காலங்கள் புதிதாய் துளிர்த்து
விடும்படி நம்பிக்கைகள்
வேர் கொள்கின்றன...!

உங்கள்
நிழலை எழுதுங்கள்...!


எனது மெல்லிய
இசை அறையில் வழக்கம் போல்
நான் மட்டும் என் புத்தகங்களோடும்
இசை நாடாக்களோடும் வசிக்கிறேன்....

• 06.05.2005

# தொலைந்து போன முகவரிகள்

அத்தையும்
சித்தியும்
'கம்மம்பில்'
இடிக்கும்
குத்து உரல்
கேட்பாறற்று
கிடக்கிறது
வீதியில்
வரலாற்று
நினைவுச் சின்னமாய்
நிற்கிறது
பரமக்குடி
வேளாளன்
மண்பானை
கடைவிரிக்கும்
புளியமரம்,
மங்கிக் கிடக்கிறது
ஆளை பயமுறுத்தும்
அய்யனார் சிலை
தன்
அரிவாளை
தொலைத்து,
மஞ்சக் கொல்லையில்
யானை மலையாய்
அமர்ந்திருக்கும்
வைக்கோல்போர்
வெறுமையாய்
காட்சியளிக்கிறது,

பருவ உணர்வுகளைப்
பகிர்ந்து கொண்ட
மாடுகளற்ற
மாட்டுவண்டிகளின்
இன்றைய
இருப்பிடங்கள்
எதுவெனத் தெரியவில்லை'



எம். சிவபாரதி

## ஒரு கவிஞன் பிரகடனம் செய்கிறான்

"பென்ஒக்ரி
(Benokri)
இங்கிலாந்தில்
வாழும் கறுப்பு
எழுத்தாளர்,
கவிஞர்,
பேராசிரியர்,

இந்தக் கவிதை
"ஒரு ஆபிரிக்க
சோகப்பாடல்" எனும்
தொகுப்பிலிருந்து
யமுனா
ராஜேந்திரனால் மொழி
பெயர்க்கப்பட்ட
கவிதையாகும்.

பென்ஒக்ரி
உலகெங்கும்
பரவாலாகப்
படைக்கப்படும்
படைப்பாளி.
ஆழ்ந்த கலையழகும்
தனது
கலாச்சாரத்தின்மீது
காதலும் மனிதகுல
ஒன்றிணைவில்
நாட்டமும்
கொண்டது இவர்
படைப்புக்கள்."

நன்றி
புதுமை இலக்கியம்

வேறுவேறு காலகட்டங்களில்
நம் எல்லோருக்கும் இத் தருணம் வரும்
உலோக நடுக்கங்கள் நிறைக் காற்றாக
நவம்பர் மாதத்து குளிர்க்கரமாக
ஒரு விநோதமான பருவத்தில்.

வீரம் முளையிலிருந்து விடுபடும் போது
இரக்கமற்ற கூர்மையான வெள்ளைத் தலைவிதி
உலகை ஊடுருவி நட்சத்திரங்களோடு
ஆன்மாவில் ஜொலிக்கும் ஒளியுடன்
பயணிக்கும் வேளை
கொடுமுடிக் கனவில் மோதி உடைக்கும்போது.

வேறுவேறு காலகட்டங்களில்
நம் எல்லோருக்கும் இத்தருணம் வரும்

நமது ஆன்மாவின் அடித்தளத்தை
நடுநடுங்கவைக்கும் பூகம்பமாக
பிசாசின் சேமிப்புப்பெட்டக வெடிப்புசனாக
மூலமுதலான ஆதிகால சக்திகளின் பிறலாக
எமது சொர்க்க பயங்களின் மனம் நிறைபரவலாக

சிவந்த விழிகளோடு
எரிந்த கரங்களோடு
இந்தக் குளிர் துருப்பிடித்த மாதத்தில்.

ஒரு ஆதிகாலக் கனவின் ஜீவாலையுடன்
என்னை இணைத்துக் கொள்கிறேன்

இசை எனது ஆன்மாவை ஒளியேற்றட்டும்
அனுமதிக்கப்பட்ட தூரத்தை கடந்து நான்
யாத்திரை போவேன்
புதிய வெளிச்சத்தின் வெகுமதிகளைத்தேடி.

**பென் ஒக்ரி**

தமிழில்
**யமுனா ராஜேந்திரன்**

*மகா கவிஞன்*

# விளாடிமிர் மயாகோவ்ஸ்கி

---

*ஏய்,*
*நீயும் நானும்*
*நாம் இருவர்,*
*மேலும் துணிவோம்*
*கவிஞனே வா,*

*எழு*
*இந்த பூமி எவ்வளவு சோம்பி*
*இருப்பினும்*
*நாம்*
*பாடுவோம்*
*பிரகாசிப்போம்*
*எனது ஒளிக்கதிர்களை*
*நான் வழங்குவேன்*
*நீ உனது*
*கதிர்களை*
*வழங்குவாய்*
*உன் பாடல்களில்.*

● ●

தமிழில்:
எஸ்.வி.ராஜதுரை

---

*அளிப்பு: 50/=* *தனிச்சுற்று*